## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 167/2023 P.W. 1 / LW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கவிதா | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. சந்திரசேகரன் | **Calling** | : | |
| **Village** | : | திருத்துறைப்பூண்டி , தெற்கு பாமணி | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 47 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.05.2024**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியான முருகையன் எனது கணவர். கடந்த 24.10.2007 ஆம் தேதி எனக்கும் , எனது கணவருக்கும் திருமணம் நடந்தது , ஒரு பிளாட், 35 பவுன் நகையும், வண்டி ,2 லட்சம் மதிப்புள்ள சீர்சாமானகள் அனைத்தும் செய்து முறைப்படி திருமணம் செய்து வைத்தார்கள். அதன்பிறகு அனைத்தையும் விற்றுவிட்டு என்னை அடித்து , எனது தகப்பனார் வீட்டிற்கும், சகோதரர் வீட்டிற்கும் சென்று லட்ச கணக்கில் பணம் வாங்கிவரச்சொல்லி அடித்து கொடுமை செய்தார்.

2) திருமணம் முடிந்து இரண்டு மாதத்தில் இருந்து கொடுமை செய்து வந்தார். அவ்வாறு கொடுமை செய்து வந்ததால் நான் எனது சகோதரரிடம் சொல்லி மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அரசுத்தரப்பில் குறியீடு செய்ய வேண்டப்படுகிறது. ( **அந்த புகார் அசா.ஆ. 1 ஆ க குறியீடு செய்யப்படுகிறது.** )

3) 17.05.2023 அன்று புகார் கொடுத்தேன்.. 19.05.2023 ல் வழக்கு பதிவு செய்தார்கள். நான் அவருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை. எனது பணத்தையும், நகையையும் , பொருட்களையும் மற்றும் இடத்தையும் என்னிடம் ஒப்படைக்கவேண்டும் எனது பிள்ளைகளை என்னிடம் ஒப்படைத்தால் அவர்களை நான் பார்த்துக்கொள்வேன்.

கொடுமை செய்ததால் நான் அவருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை. அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .**

1) இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 16.03.2023 அன்று விசாரித்தார்கள். நான் பி.இ இஞ்சினியரிங் படித்துள்ளேன்.

**2)** எனது திருமணம் எனது தந்தையார் செலவில்தான் நடந்தது . எனது தகப்பனார் அரசுப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார். நான் சொல்லும் வீட்டு மனை எனது தந்தையார் எனது பெயருக்கு வாங்கி பதிவு செய்து கொடுத்திருந்தார் என்றால் சரிதான். ஆஜர் எதிரி பெயரில் பத்திரம் பதிவு செய்யவில்லை.

**3)** எனக்கு 35 பவுன் நகை கொடுத்தது, வாகனம் வாங்கிக்கொடுத்தது மற்றும் ரூ. 2 லட்சத்திற்கு சீர்வரிசை செய்தது ஆகியவற்றிற்கு காவல்துறையில் ஆவணங்கள் என்னிடம் கேட்டு பெற்றார்களா? என்றால் எதுவும் வாங்கவில்லை. எனது கணவர் திருமணம் முடிந்த இரண்டு மாதத்திலேயே கொடுமை செய்தார் என்பது குறித்து எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் எழுதிக்கொடுத்துள்ளேன். அவ்வாறு எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் பொய்யாக எழுதிக்கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு உடல்நிலை சரியில்லை என்று எனது புகாரில் கூறப்பட்டுள்ளதில் எனக்கு என்ன உடல்நிலை பிரச்சனை என்றால் சுகர், பிரஸ்சர் உள்ளது. அதற்கு மருந்து மாத்திரைகள் வாங்கிதரமாட்டார். நான் திருமணம் ஆனதிலிருந்து தனிக்குடித்தனமாக ராகவன் தெருவில் லாலாஸ் காலனியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான்.

4) எனக்கு இரட்டைக்குழந்தைகள் உள்ளது. நான் கர்ப்பிணியாக இருந்தபோது கீழே விழுந்து தலையில் அடிப்பட்டது என்றாலும், அது முதல் நான் மனநலம் பாதிக்கப்பட்டிருந்தேன் என்றாலும் சரியல்ல. நான் மருத்துவம் பார்த்தது தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனையில் உள்ள மருத்துவர் ஜோசப்பிடம் என்றால் சரியல்ல. எனது இரண்டு குழந்தைகளும் எதிரியின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் உள்ளார்கள் என்றால் சரிதான்.

5) இந்த வழக்கு சம்பந்தமாக முதல் புகாரை மன்னார்குடி காவல்துணை கண்காணிப்பாளரிடம்தான் கொடுத்தேன் என்றால் சரிதான். அதேபோல் காவல் ஆய்வாளரிடம் ஒரு புகார்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் இரண்டு புகார்கள் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ஒரு புகார்தான் கொடுத்தேன். நான் புகார் கொடுத்தபிறகு வழக்கு பதிவுசெய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை நான் கையொப்பம் பெற்று நகல் பெற்றுக்கொண்டேன்.

6) நான் கொடுத்த புகாரில் சம்பவம் குறித்து தேதி, நேரம் ஆகியவை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு குறிப்பிடப்படவில்லைஎ ன்றாலும், முதல் தகவல் அறிக்கையில் குற்ற நிகழ்வு குறித்து தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சம்பவத்தை பற்றி குறிப்பிட்டிருப்பார்கள். முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டப்பிடப்பட்டுள்ள குற்ற நிகழ்வு நாள் , நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2012 ஆம் ஆண்டு இறந்து விட்டார். எனது தகப்பனார் உயிரோடு இருந்த காலம் வரையில் எனக்கு அவர்தான் சிகிச்சைக்கு உதவியாக இருந்தார் என்றால் சரியல்ல.

7) எனது கணவர் ஆசிரியராக பணிபுரிந்து மாதம் ஒரு லட்சம் சம்பளம் வாங்கி வருகிறார் என்றால் ( **சாட்சி ஆரம்பம் முதலில் இருந்தே குறுக்கு விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை.) வழக்கு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**ஒம் /-எம்.முருகேசன்,**

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.